# <u>அமெரிக்க மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவம்.</u>

## <u>ஊடகவியலாளர் சந்திப்பு</u>

தமிழர் மருத்துவமான சித்த மருத்துவத்தின் மகத்துவத்தை அறிவியல் ஆய்வுப்பூர்வமாக ஓர் அங்கிகாரம் பெற்ற பாரம்பரிய மருத்துவ முறையாகப் பரப்புவது அவசியமென உலகத் தமிழர்கள் குறிப்பாக அமெரிக்கத் தமிழர்கள் விரும்புகின்றனர். சித்த ஒருங்கிணைந்த மருத்துவத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த மருத்துவ மாமேதை செ. நெ. தெய்வ நாயகம் அவர்களால் தொடங்கப்பட்ட இந்திய நல வாழ்வு நல்லறம் (Health India Foundation) என்கிற தொண்டு அமைப்பு நீண்ட காலமாக ஒருங்கிணைந்த மருத்துவத்தில் ஆய்வு செய்து வருகிறது. அந்நிறுவனத்தின் முன்னெடுப்பில் அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் உள்ள புகழ் பெற்ற மோர்கவுஸ் மருத்துவ கல்லூரி (Morehouse School of Medicine, Atlanta, USA) தமிழர்களின் மருத்துவமாகிய சித்தமருத்துவத்தை ஒரு பாடத்திட்டமாக அங்கீகரித்து செயல்படுத்தி வருகிறது. இது அமெரிக்க மருத்துவ வரலாற்றிலேயே முதன்முறை என்பது குறிப்பித்தக்கது. இதனால் அமெரிக்க மற்றும் கனடாவைச் சேர்ந்த மருத்துவ மாணவர்கள் சித்தமருத்துவம் கற்றுக்கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு 4 மருத்துவ மாணவர்கள் இரண்டு பேராசிரியர்களின் வழிகாட்டுதல்களுடன் இந்தியா வந்து சித்த மருத்துவம் கற்றுக்கொண்டுள்ளார்கள். இந்த சித்த மருத்துவப் பயிற்சி திட்டத்தில் சித்தர் வாழ்வியல் மருத்துவம், சித்தர் யோக மருத்துவம், வர்ம மருத்துவம், மூலிகை மருத்துவம், உணவு மருத்துவம் சித்தர் நாடி பார்க்கும் கலை, போன்றவற்றை ஆங்கில மருத்துவமுறையுடன் எப்படி இணைத்து பயன்படுத்துவது என்பதை கற்றுக்கொண்டுள்ளார்கள். இதனால் செலவு குறைந்த வீரியமான மருத்துவத்தை வழங்க இயலும். இந்த சித்த மருத்துவ பயிற்சி பாட திட்டம் இந்திய நல வாழ்வு நல்லற மருத்துவமனையில் 3 வாரங்களும் மணிபால் பல்கலைக்கழகத்தில் 1 வாரமும் நடக்கின்றது. இந்த பயிற்சி வரும் 18.10.2024 அன்று நிறைவடைகிறது. அதனைத் தொடர்ந்து 18.10.2024 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இந்திய நல வாழ்வு நல்லற மருத்துவ வளாகத்தில் ஊடகவியளாலர்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இந்திய நல வாழ்வு நல்லறம், 31, வெங்கட்நாராயணா ரோடு, திருப்பதி தேவஸ்தான அலுவலகம் எதிரே, நுழைவு பகவந்தம் தெரு வழியே)

இதனைத் தொடர்ந்து 19.10.2024 சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு மருத்துவமனை வளாகத்திலிருந்து 5 கிலோமீட்டர் நடை பயணம் (Siddha Walkathon HIF 2024) தொடங்குகிறது. தரணியெங்கும் தமிழ் மருத்துவம் என்கிற குறிச்சொல்லுடன் (tagline) நிகழ உள்ளது.

மேற்கண்ட இரு நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். கடல் கடந்து சென்றுள்ள சித்த மருத்துவத்தின் பெருமையினை தங்கள் ஊடகத்தின் வாயிலாக மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுகிறோம்.

அன்புடன்,


மருத்துவர். ப. செல்வ சண்முகம்.

சித்த மருத்துவ பயிற்சித் திட்ட இயக்குனர் - இந்தியா.

செயலர், இந்திய நலவாழ்வு நல்லறம்(Health India Foundation), சென்னை

தலைவர், சித்த மருத்துவம் மற்றும் ஆராய்ச்சிக்கான உலகளாவிய மையம் (Global Center for Siddha Medicine and Research), சென்னை.

வருகைப் பேராசிரியர், மோர்கவுஸ் மருத்துவக் கல்லூரி, அட்லாண்டா, அமெரிக்கா.

தொடர்புக்கு

98948 28968

9345572908


HEALTH INDIA FOUNDATION
Ancient Wisdom Meets Modern Care

GLOBAL CENTER FOR SIDDHA MEDICINE AND RESEARCH

MOREHOUSE SCHOOL OF MEDICINE